# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.152/2018

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 20–02–2026.

பெயர் = லட்சுமணன்

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1, 3, 5, 9 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

1) சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நாராயணன் கேட்டுகொண்டதால் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நாராயணன் எனக்கு தாய்மாமா என்றால் இல்லை மாமனார். நிரூபண வாக்குமூலம் நாராயணன் சொல்லி டைப் செய்தார்களா என்றால் வக்கீல் அலுவலகத்தில் நான் சொல்லிதான் டைப் செய்தார்கள். வாதி பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள பிரச்சனை ஆரம்ப காலகட்டத்திலிருந்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் எனக்குதெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளான சின்னசாமி வகையறாவும் சர்க்கரை என்பவரிடமிருந்துதான் சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்தின் மேற்கே உள்ள ரோடு வழியாக தான் சர்க்கரை என்பவர் போய்வந்து புழங்கி வந்தார் என்றால் சரிதான்.

2) இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் நாராயணன் வீட்டிற்கு அருகில் பொது குடிநீர் குழாய் இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி வாதி வீட்டிற்கு அருகில் பொது குடிநீர் குழாய் இருந்தது அதில் யார் முதலில் தண்ணீர் பிடிப்பது என்று பிரச்சனை ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி குடிநீர் குழாய் பிரச்சனை சம்பந்தமாக ஊர் தலைவர் பூச்சி என்பவரிடம் புகார் கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி பிரச்சனை செய்ததால் குடிநீர் குழாயை வேறு இடத்திற்கு மாற்றி வைத்துவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. தற்போது மெயின் ரோட்டில் குடிநீர் குழாய் இருக்கிறது என்று சாட்சி கூறுகிறார். குடிநீர் குழாய் பிரச்சனையில் என்மீதும் வாதி நாராயணன் மீதும் காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. குடிநீர் குழாய் பிரச்சனையில் நாராயணனை ஊர் அம்பலம்

விலக்கி வைக்கபோவதாக சொன்னார்கள் என்றால் சரியல்ல. அந்த பிரச்சனையால்தான் தாவா சொத்தை பிரதிவாதிகள் அனுபவிக்க விடாமல் வாதி பிரச்சனை செய்கிறார்கள் என்றால் சரியல்ல. பாதையே இல்லை என சாட்சி கூறுகிறார்.

3) வாதி வீட்டிற்கு கிழக்கே பிரதிவாதிகள் அனைவரும் வீடும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் கிழமேல் ரோட்டிற்கு வருவதற்கு நாராயணன் வீட்டிற்கு அருகில் உள்ள பாதையைதான் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வடக்கே பாதை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வடக்கே வேறு பாதை உள்ளது என சொல்லியுள்ளேன். கிரையம் வாங்கிய காலத்திலிருந்து பிரதிவாதிகள் வாதி வீட்டின் வடக்கே உள்ள பாதை வழியாகதான்புழங்கி வருகிறார்கள் நான் வாதியின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பாதை தவிர வேறு பாதை கிடையாது வேறு பாதை இருப்பதாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.20 17:19:05 +0530